# மத்திய ஆசிய நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு இரண்டாவது இளைஞர் குழுவின் வருகை

மார்ச் 07, 2024

ஐந்து மத்திய ஆசிய நாடுகளில் இருந்து 100 உறுப்பினர்களைக் கொண்ட இளைஞர் குழு 05 முதல் 13 மார்ச் 2024 வரை இந்தியாவிற்கு வருகை தருகிறது.

மத்திய ஆசிய நாடுகளில் இருந்து இளைஞர் குழு இந்தியாவுக்கு வருவது இது இரண்டாவது முறையாகும். நவம்பர், 2022 இல், இதே போன்று முதல் இளைஞர் குழுவை இந்தியா நடத்தியது. இது ஜனவரி, 2022 இல் நடைபெற்ற முதல் இந்தியா-மத்திய ஆசிய உச்சி மாநாட்டில் இருந்து வெளிப்படும் முயற்சிகளில் ஒன்றாகும் .

பல்வேறு துறைகளைச் சேர்ந்த இளைஞர் தலைவர்கள், மத்திய ஆசியாவில் இருந்து சாதனையாளர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள் இந்தியாவின் வளர்ச்சி, அதன் தொழில்நுட்பம், தொழில்துறை மற்றும் ஆராய்ச்சி திறன்களை தாங்களாகவே பார்க்கவும், இந்தியாவின் விண்வெளித் திட்டத்தைப் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறவும், இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை அனுபவிக்கவும் வாய்ப்பு கிடைக்கும். தில்லி மற்றும் அகமதாபாத்தில் அமைந்துள்ள IIT மற்றும் IIM போன்ற முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்கள், தில்லி வரலாற்று இடங்கள், MY BHARAT தன்னார்வலர்களுடன் கலந்துரையாடல், இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்தல், தாஜ்மஹாலைப் பார்வையிடுதல் ஆகியவை இவர்களது திட்டத்தில் அடங்கும்.

வரலாற்று ரீதியாக, இந்தியாவும் மத்திய ஆசியாவும் மக்கள், கலாச்சாரம் மற்றும் கருத்துக்களின் தொடர்ச்சியான பரிமாற்றத்தை அனுபவித்து வருகின்றன. இந்தப் பயணம், மத்திய ஆசிய நாடுகளின் இளைஞர்கள் மத்தியில் இந்தியாவைப் பற்றிய கற்பனையை விரிவுபடுத்தும் வகையில் இந்த பயணம் இருக்கும். மேலும், இந்திய சமூகம், வளர்ச்சி, உள்கட்டமைப்பு, வறுமைக் ஒழிப்பு மற்றும் சமீபத்திய ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள மாற்றங்கள்

ஆகியவற்றைப் பற்றி அவர்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும். இந்த பயணத்தின் மூலம் மத்திய ஆசியாவைச் சேர்ந்த இளம் பிரதிநிதிகள் வெளிப்படுத்திய உணர்வுகள், தற்கால இந்தியாவைப் பற்றி நன்கு புரிந்துகொள்ளவும், இந்தியாவிற்கும் மத்திய ஆசிய நாடுகளுக்கும் இடையிலான மக்களுக்கிடையேயான தொடர்ச்சியான தொடர்புக்கான அடித்தளத்தை உருவாக்கவும் உதவும்.

**புது தில்லி**
**மார்ச் 07, 2024**